வணக்கம்
ஆகாஷ்வாணி – புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர் : நாராயணசாமி
தேதி : 13-10-2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள் :</u>

- பாதுகாப்புப் படையினர், ஆராய்ச்சி – அபிவிருத்தி, மற்றும், புதுமையாக்க முயற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார்.
- அனைத்து பிரிவு மக்களுக்கும் அதிகாரமளிப்பதே அரசின் நிர்வாக அணுகுமுறை என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி குறித்த, சர்வதேச செலாவணி நிதியத்தின் 6.4 சதவிகித கணிப்பு, 7 சதவிகிதமாக உயர்த்தப் பட்டுள்ளது.
- தனிநபர்கள், வர்த்தகர்களுக்கு பணம் வழங்கும் UPI பரிவர்த்தனைகள் மீது, MDR கட்டணம் விதிக்கும் நடைமுறைகள், தீபாவளிக்குப் பின்னர் அமலாக உள்ளன.

<u>முர்மு (18)</u>

தேசிய பாதுகாப்பு கல்லூரியில், 66ஆவது குழுவாக பயிற்சி பெறும் அதிகாரிகள், கல்லூரிப் பயிற்றுநர்களுடன் இணைந்து இன்று புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவை சந்தித்தனர். இன்றைய சூழலில் உள்நாட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்த, வழக்கமான ராணுவ பலம் மட்டுமே போதாது என்றும், நவீன போர் முறைகளில், சைபர் பாதுகாப்பு, விண்வெளி தொழில்நுட்பம், மற்றும், உயிரி தொழில் நுட்பங்களுக்கும் பங்கு அதிகரித்து வருவதால், சிக்கலான, புதிய சவால்களை திறம்பட்ட முறையில் சந்திக்கத் தேவையான தொலைநோக்கு மற்றும் தயார் நிலையை வலுப்படுத்திக் கொள்ளுதல்

அவசியம் என்றும், குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார். பாதுகாப்புப் படையினர், ஆராய்ச்சி – அபிவிருத்தி, மற்றும், புதுமையாக்க முயற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். தேசிய பாதுகாப்பில் மட்டுமின்றி, நாட்டின் பொருளாதார செயல்பாடுகளிலும், செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு அதிகரித்து வருவதை, குடியரசுத் தலைவர் சுட்டிக் காட்டினார். தேசிய பாதுகாப்புத் தொடர்பான முக்கிய பிரச்சனைகளில், உடனுக்குடன் விரைந்து முடிவெடுக்கும் திறன்களை பாதுகாப்புப் படையினர் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

<u>மோடி பொருளாதாரம் -1 (7)</u>

அரசின் நிர்வாக அணுகுமுறை மற்றும் பணிக் கலாச்சாரத்தில், அனைத்துப் பிரிவினருக்கும் அதிகாரமளிப்பதே, அரசின் அதிகாரம் என்ற கொள்கைக்கு முக்கிய இடம் இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இக்கொள்கையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில், டிஜிட்டல் வசதி போன்ற புதிய சீர்திருத்தங்களுக்கு முக்கிய பங்கு இருப்பதாக, அவர் இன்று புதுடெல்லியில், புதிய பொருளாதாரம் குறித்த ப்ளூம்பெர்க் பேரவை மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

<u>மோடி பொருளாதாரம் - 2 (15)</u>

<u>நடப்பு 21ஆம் நூற்றாண்டில், டேட்டா, தொழில்நுட்பம், மற்றும், புதுமையாக்க முயற்சிகள், அதிகாரத்தின் முக்கிய ஆதாரங்களாகவே மாறியிருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். இத்தகைய புதிய வசதிகளில், இந்தியாவின் திறன்களை மேம்படுத்துவதால், இந்தியாவிற்கு மட்டுமின்றி, இதர நாடுகளுக்கும் பயன் கிடைப்பதை உறுதிப் படுத்துவதே அரசின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார். அனைவருக்குமான வாய்ப்புகள் – அனைவருக்குமான வளர்ச்சி என்பதே, இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அடிப்படை என்று, பிரதமர் கூறினார்.</u>

கடந்த 10 ஆண்டுகளில், இந்தியாவில் 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீட்கப் பட்டு இருப்பதையும், இந்தியாவில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கை, இரண்டரை லட்சத்தைத் தாண்டி அதிகரித்து வருவதையும், அவர் சுட்டிக் காட்டினார். இதில் சுமார் 50 சதவிகித ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், சிறு நகரங்களில் இருந்து செயல்பட்டு வருவதாகவும், 45 சதவிகித ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், குறைந்தபட்சம் 1 பெண் இயக்குநரின் கீழ், செயல்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

செலாவணி நிதியம் (14)

நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி குறித்த, சர்வதேச செலாவணி நிதியத்தின் 6.4 சதவிகித கணிப்பு, 7 சதவிகிதமாக உயர்த்தப் பட்டுள்ளது. இவ்வாண்டு, இதுவரையிலான, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில், வலுவான உள்நாட்டுத் தேவைகள் மற்றும் சேவை செயல்பாடுகளால், எதிர்பார்க்கப் பட்டதை விட அதிக உத்வேகம் காணப்படுவதன் அடிப்படையில், முழு ஆண்டிற்கான கணிப்பு இவ்வாறு உயர்த்தப் பட்டுள்ளதாக, உலகப் பொருளாதாரம் குறித்த, சர்வதேச செலாவணி நிதியத்தின் கண்ணோட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தியாவின் உள்நாட்டுச் சந்தை, தொடர்ச்சியாக வலுவடைந்து வருவதும், அமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப் படுவதும், வளர்ச்சி வேகம் அதிகரிக்க சாதகமான சூழல் ஒன்றை ஏற்படுத்தி இருப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்த ரிசர்வ் வங்கியின் கணிப்பு, அண்மையில், 7.1 சதவிகிதமாக உயர்த்தப் பட்டதும் குறிப்பிடத் தக்கது.

ராஜ்நாத் – சந்திப்பு (9)

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று புதுடெல்லியில், செக் குடியரசின் துணைப் பிரதமரும், தொழில் – வர்த்தக அமைச்சருமான திரு. கரேல் ஹாவ்லிசெக்-கை சந்தித்துப் பேசினார். சுயசார்பு இந்தியா இயக்கத்தை வலுப்படுத்தும் வகையில், கூட்டுப் பாதுகாப்பு குழுவின் மூலம், இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்ள, இரு நாடுகளும் இணங்கி இருப்பதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில், திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். 4 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள திரு. ஹாவ்லிசெக், பெங்களூரு மற்றும் மும்பையில், பல்வேறு தொழில் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்திக்க இருக்கிறார்.

கனடா பயணம் (5)

கனடா நாட்டின் வெளியுறவு அமைச்சர் திருமதி. அனிதா ஆனந்த், இன்று முதல் இந்தியாவில் 2 நாள் பயணம் மேற்கொள்கிறார். அவர் இப்பயணத்தின் போது, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்துப் பேசுகிறார். நாளை மத்திய திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ஜெயந்த் சவுத்ரி உள்ளிட்டவர்களையும் அவர் சந்திக்கிறார்.

UPI (13)

தனிநபர்கள் UPI மூலம், வர்த்தகர்களுக்கு பணம் வழங்கும் பரிவர்த்தனைகள் மீது, MDR கட்டணம் விதிக்கும் நடைமுறைகள், தீபாவளிக்குப் பின்னர் அமலாக உள்ளன. பண்டிகைக் காலத்தை கருத்தில் கொண்டு, UPI மற்றும் இதர சேவைகளுக்கான வழிகாட்டுதல் குழு, இன்று இவ்வாறு முடிவு செய்திருப்பதாக, தேசிய பணப் பட்டுவாடா கழகம், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளது. வர்த்தகர்களுக்கு, தனிநபர்கள், 2 ஆயிரம் ரூபாய்க்கு மேல் பணம் செலுத்தினால் மட்டுமே, MDR கட்டணம் பொருந்தும் என்றும், தனி நபர்கள், இதர தனி நபர்களுக்கு எவ்வளவு பணம் செலுத்தினாலும், கட்டணமில்லாத நிலை தொடரும் என்பதால், 96

சதவிகித UPI பரிவர்த்தனைகளுக்கு எந்த பாதிப்பும் இராது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தனி நபர்கள் இடமிருந்து, UPI QR Code மூலம், மாதம் 1 லட்சம் ரூபாய் வரை பணம் பெறும், சிறு வணிகர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகளுக்கும் MDR கட்டணம் பொருந்தாது என, அறிவிக்கப் பட்டுள்ளது.

<u>மக்கள் சேவை மூலமான தேச சேவை - 1 (13)</u>

மக்கள் சேவை மூலமான தேச சேவை என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் சேவைப் பயணம், இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. சேவை மற்றும் நல்லாட்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி - அனைவருக்கும் சமூக அதிகாரம் என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 2025ஆம் ஆண்டின் வக்ஃபு சீர்திருத்தங்களால், அரசு நிலம் வக்ஃபு சொத்துக்களாக மாற்றப்படுவதை கட்டுப்படுத்த முடிந்திருப்பது குறித்து, இன்று, சேவா சங்கல்ப் அபியான் என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம்...

(வாய்ஸ்)

<u>மக்கள் சேவை மூலமான தேச சேவை - 2 (18)</u>

(வாய்ஸ்)

<u>வக்ஃபு சட்டத்தின் 40ஆவது பிரிவு, வக்ஃபு வாரியம் நினைத்தால் எந்தவொரு சொத்தையும் வக்ஃபு சொத்தாக தானாகவே அறிவித்துக் கொள்வதை அனுமதித்து வந்தது. இதன் காரணமாக நாட்டில், 2.07 லட்சமாக இருந்த வக்ஃபு சொத்துக்களின் எண்ணிக்கை, 2013ஆம்</u>

ஆண்டில், 8.72 லட்சமாக அதிகரித்து இருந்தன. அரசுக்கு சொந்தமான 5 ஆயிரத்து 973 சொத்துக்களும் இதில் அடங்கும். 2025ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட, உமீத் சட்டம் என்னும், வக்ஃபு திருத்தச் சட்டம், இந்த 40ஆவது பிரிவை நீக்கியது. அரசு நிலங்கள் மீதான வக்ஃபு வாரியத்தில் எந்தவொரு உரிமைக் கோரிக்கையும், மாவட்ட ஆட்சியரை விட உயர்நிலையில் உள்ள அதிகாரி ஒருவரால் ஆராயப்பட வேண்டும் என, திருத்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டது. இத்தகைய விசாரணையின் முடிவுகளை ஆட்சேபித்து, உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யும் வாய்ப்பும் முதல்முறையாக திறந்துவிடப் பட்டது. சட்ட மாற்றங்களுக்கு ஏற்ப சொத்து ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கும் வசதிகளும் கொண்டு வரப்பட்டன. வக்ஃபு வாரியத்தின் உரிமைக் கோரிக்கைகள், ஆதாரங்களின் அடிப்படையில் அமைய வேண்டுமே தவிர, அனுமானங்களின் அடிப்படையில் அல்ல என்பதை, திருத்தச் சட்டம் மூலம் அரசு உறுதிப்படுத்தி உள்ளது.

காரைக்கால் (8)

இன்று பேரிடர் அபாய குறைப்பு தினத்தை முன்னிட்டு, காரைக்கால் கடற்கரையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில், இளைஞர்கள், குடிமைப் பாதுகாப்புப் படையினர், ஆப்த மித்ரா தன்னார்வலர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அவசரகால மீட்பு நடவடிக்கைகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, செயல்விளக்க பயிற்சி அளிக்கப் பட்டது. மாவட்ட பேரிடர் மேலாண்மைத் துறை, மேரா யுவபாரத் இயக்கத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட துணை ஆட்சியர் திரு. பாலு பக்கிரிசாமி தலைமை ஏற்றார்.

## மாஹே (6)

மாஹேயில், பந்தக்கல் பிஎம்ஸ்ரீ ஜவஹர் நவோதயா பள்ளியில், குழந்தைகள் நலக் குழுவும், Child Helpline அமைப்பினரும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த குழந்தைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியை, மண்டல நிர்வாக அதிகாரி திரு. அங்கித் குமார் தொடக்கி வைத்தார். குழந்தைகளின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு குறித்து, விழிப்புணர்வு தகவல்கள் இந்நிகழ்ச்சியின் போது எடுத்துக் கூறப்பட்டன.

## வானிலை (13)

அடுத்த 2 நாட்களில் தென்னிந்தியாவின் தென் பகுதிகளில், வடகிழக்கு பருவமழை தொடங்க, சாதகமான சூழல் தென்படுவதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று, சென்னை, செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, நெல்லை, குமரி உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், இடி-மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதரப் பகுதிகளில், லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. கனமழை நாளை தென் மாவட்டங்களில் தொடங்கி, அதற்கு அடுத்த நாட்களில் இதர மாவட்டங்களுக்கு பரவலாம் என்றும், வரும் 19ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும், எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக நெல்லை மாவட்டம் ஊத்து பகுதியில் 8 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

கடலோர காவல் (8)

முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, CG-875 என்னும் அதி நவீன இலகு ரக ஹெலிகாப்டர் இன்று கடலோர காவல் படையில் முறைப்படி சேர்த்துக் கொள்ளப்பட்டது. மகாராஷ்டிர மாநிலம் ரத்னகிரியில், கடலோர காவல் படை விமான தளத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மேற்கு மண்டல கடலோர காவல் படைத் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். இது அல்லாது, இத்தகைய மேலும் 4 ஹெலிகாப்டர்கள் மேற்கு மண்டல கடலோர காவல் படையில் சேர்க்கப்பட உள்ளதாக, சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.